## 13. ASSIGNED REVENUES

## 13.13 1997–1998 முதல் 1999–2000 வரை ஊராட்சிகளுக்குச் சேரவேண்டிய பங்குத்தொகையினை பகிர்ந்தளித்தல்

சுற்றுச்சூழல் மற்றும் வன (வ 6)த் துறை

அரசாணை (நிலை) எண் 234 நாள் : 27.12.2005

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 592, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 16.8.89
2. அரசாணை (நிலை) எண் 137, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 2.5.97
3. அரசாணை (நிலை) எண் 74, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 21.3.98
4. அரசாணை (நிலை) எண் 1, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 5.1.99
5. அரசாணை (நிலை) எண் 33, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 15.2.2000
6. முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் கடிதம் எண் டிஇ1/47154/2000, நாள் 21.9.2001, 13.12.2001 மற்றும் 19.11.2003.
7. முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் கடிதம் எண் எஸ்எப்1/47154/2000, நாள் 12.5.2004,
8. முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் கடிதம் எண் எஸ்எப்1/47154/2000, நாள் 14.10.2004,

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, சமூக வன தோட்டங்களின் ஏல விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயில் வனத்துறைக்கு 40 சதவிகிதமும் ஊராட்சகிளுககு 60 சதவிகிதமும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அந்தத் தோட்டங்களின் பாதுகாப்பு பொதுமக்களின் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்படுவதால் அனைத்து சமூக வனப் பணிகளையும் ஊராட்சிகளிலும் படிப்படியாக பொறுப்புரிமை ஒப்படைப்பு செய்யப்பட வேண்டுமெனவும் கிராம சமூக வன ஊழியர்களின் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே 4–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி, நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி 60:40 என்ற வீதத்தில் வருவாய் பங்கீட்டினை உரிய முறையில் விரைவாக தொடர்ந்து வழங்கி வனத்துறையால் உருவாக்கப்பட்ட சமூக வனத் தோட்டங்கள் / பண்ணைக் காடுகள் அனைத்தும் சிறுவனப் பொருட்கள் சேகரித்தல் முதலான பணிகளும் அவற்றை பராமரிக்கும் பொறுப்பும் வனத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து இருக்கும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே 3–ல் படிக்கப்பட்ட அரசாணையில், முதிர்ந்த சமூக வனத் தோட்டங்களின் விற்பனை மூலம் கிடைக்கும் மொத்த வருவாயிலிருந்து 4022 சமூக வனத் தோட்ட ஊழியர்கள் / காவலர்களுக்கான ஊதியங்கள் மற்றும ஏனைய செலவினங்கள் கழித்து மீதமுள்ள தொகையிலிருந்து ஊராட்சிகள் / வனத் துறைக்கு முறையே 60:40 என்ற விகிதத்தில் 1.4.97 முதல் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

4. 1993–94ம் ஆண்டிலிருந்து 1995–96–ம் ஆண்டு வரை சமூக வன தோட்டங்களில் பொது ஏலம் மூலம் விற்பனை செய்ததில் கிடைத்த மொத்த வருவாயில் மேற்கண்ட அரசாணைகளின்படி 60 சதவிகித பங்குத் தொகையினை தொடர்புடைய ஊராட்சிகளுக்கு வழங்குவதற்காக மொத்த பங்குத் தொகை ரூ.21.00 கோடியில் ரூ.2.10 கோடி ரூபாய்க்கு மட்டும் நிதித் துறையால் செலவுரிமம் (letter of credit) வழங்கப்பட்டுள்ளது போக மீதமுள்ள தொகைக்கு செலவுரிமம் வழங்கக் கோரி தலைமை வனப் பாதுகாவலர் (சமூகக் காடுகள்) மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களின் செயற்குறிப்புகள் அரசால் ஆய்வு செய்து மேலே 5–ல் படிக்கப்பட்ட அரசாணையில் 1993–94 முதல் 1996–97–ஆம் ஆண்டு வரை சமூக வனத் தோட்டங்களில் ஏல விற்பனை மூலம் கிடைத்த மொத்த வருவாயிலிருந்து கிராம சமூக வனத் தோட்ட ஊழியர்கள் / காவலர்களுக்கான ஊதியங்கள் மற்றும் ஏனைய செலவினங்களைக் கழித்தது போக மீதமுள்ள பங்குத் தொகை ரூ.8.75 கோடி (ரூபாய் எட்டு கோடியே எழுபத்தி ஐந்து இலட்சங்கள் மட்டுமே ) என கணக்கிடப்பட்டு அந்த தொகையினை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்க ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. 1997 –1998 முதல் 1999–2000 வரை சமூக வனத்தோட்டங்கள் ஏல விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற மொத்த வருவாய் ரூ.27,10,37,000/–ல் கிராம சமூக வன தோட்ட ஊழியர்கள்/ காவலர்களுக்கான ஊதியம் இதர

செலவினம் ரூ.11,07,59,000/– போக மீதமுள்ள தொகை ரூ.16,02,78,000/–ல் ஊராட்சிகளுக்கு சேரவேண்டிய 60 சதவிகித பங்குத் தொகை ரூ.9,61,67,000/– (அல்லது) 9.62 கோடி என குறிப்பிட்டு அதன் விபரங்களை பின்வருமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

| நிதி ஆண்டு | விற்பனை மூலம் கிடைக்கப் பெற்ற மொத்த வருவாய் | கிராம சமூக வனத் தோட்ட ஊழியர் காவலருக்கான மொத்த செலவினம் | நிகர வருவாய் | நிகர வருவாயில் பஞ்சாயத்துகளுக்கு சேர வேண்டிய 60 சதவிகித பங்குத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1997–98 | 57,885 | 33,202 | 24,683 | 14,810 |
| 1998–99 | 63,876 | 39,363 | 24,513 | 14,708 |
| 1999–2000 | 1,49,276 | 38,194 | 1,11,082 | 66,649 |
| மொத்தம் | 2,71,037 | 1,10,759 | 1,60,278 | 96,167 (அல்லது) 9,62 கோடி |

மேலும் அரசாணை(நிலை) எண் 796 வனம் மற்றும் மீன் துறை, நாள் 7.7.83–ன்படி ஊராட்சிகளுக்கு சேரவேண்டிய பங்குத் தொகையில் 20 சதவிகிதம் பஞ்சாயத்து வன மேம்பாட்டு நிதிக்கு ஒதுக்கப்படவேண்டும் என குறிப்பிட்டு நிகர வருவாயில் ஊராட்சிகளின் 60 சதவிகித பங்குத் தொகை ரூ.9.62 கோடிக்கு ஒப்பளிப்பும், அதில் 20 சதவிகிதம் தொகையான ரூ.1.92 கோடியை பஞ்சாயத்து வன மேம்பாட்டு பணிகளுக்காக சம்பந்தப்பட்ட கோட்ட வன அலுவலர்களிடமே நிறுத்திக் கொண்டு மீதித் தொகை ரூ.7.70 கோடியை ஊராட்சிகளுக்கு விடுவித்து ஆணை வழங்குமாறு முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

6. முதன்மை தலைமை வனப் பாதுகாவலரின் செயற்குறிப்பு அரசால் விரிவாக ஆராயப்பட்டது. மாநில கணக்காய்வு தலைவரின் கணக்குப் புத்தகங்களின் அடிப்படையில் 1997–1998 முதல் 1999–2000–ம் ஆண்டுவரை சமூக வனத் தோட்டங்களில் ஏல விற்பனை மூலம் கிடைத்த மொத்த வருவாயில் கிராம சமூக வனத் தோட்ட ஊழியர்கள் / காவலர்கள் ஊதியங்கள் முதலானவை கழித்தது போக மீதமுள்ள நிகர வருவாயில் ஊராட்சிகளின் பங்குத் தொகை பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| நிதி ஆண்டு | மொத்த வருவாய் (ரூபாய் ஆயிரத்தில்) | கிராம சமூக வனத் தோட்ட ஊழியர்/ காவலருக்கான மொத்த செலவினம் (ரூபாய் ஆயிரத்தில்) | நிகர வருவாய் (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1997–1998 | 38,571 | 33,202 | 5,369 |
| 1998–1999 | 73,171 | 39,363 | 33,808 |
| 1999–2000 | 1,14,333 | 38,194 | 76,139 |
| மொத்தம் | 2,26,075 | 1,10,759 | 1,15,316 |

நிகர வருவாய் ரூ.1,15,316ஆயிரத்தில் ஊராட்சிகளின் 60 சதவிகித பங்குத் தொகை ரூ.691.896 இலட்சம் ஆகும்.

7. மேற்குறிப்பிட்ட கணக்குகளின் அடிப்படையில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களின் செயற்குறிப்பு அரசால் கவனமாகஆய்வு செய்யப்பட்டு ஊராட்சிகளின் பங்குத் தொகையில் 20% தொகை அதாவது ரூ.138,3792 இலட்சம் பஞ்சாயத்து வனங்களின் மேம்பாட்டிற்கு ஒதுக்கப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 1997–98,1998–99 மற்றும் 1999–2000– ஆண்டுக்கான சமூக வனத் தோட்டங்களில் ஏல விற்பனை மூலம் கிடைத்த வருவாயில் ஊராட்சிகளின் 60% பங்குத் தொகையாக ரூ.691896 இலட்சம (ரூபாய் ஆறு கோடியே தொன்னூற்று ஒரு இலட்சத்து என்பத்தி ஒன்பதாயிரத்து ஆறுநூறு மட்டும்) சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்க ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

8. மேலே ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கீழ் கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கலாம்.

0406 – காடுவளர்ப்பும் வனவிலங்கும் 01காடு வளர்ப்பு – 102 சமூக பண்ணைக்காடுகளிலிருந்து கிடைக்கும் வரவுகள் AL கழிக்கவும் பண்ணைக்காடு வளர்ப்பு வருவாயிலிருந்து ஊராட்சிகளுக்கு மாற்றப்பட்டது.
(த.தோ.கு 0406.01.102AL.0009)

## 13. ASSIGNED REVENUES

**9.** மேலே ஒப்பளிக்கப்பட்ட தொகையினை சம்மந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்குமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**10.** இந்த ஆணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. அ.சா.எண்.**542**/JS(KG)/**2005–1** நாள் **26.12.2005**

(ஆளுநரின் ஆணைப்படி)

**சுர்ஜித் கே.சவுத்ரி**
அரசு செயலாளர்